சார்பு நீதிமன்றம், பொள்ளாச்சி

வழக்கு எண். எம்.சி.ஓ.பி.156/2017

2024 ம் ஆண்டு **12.04.2024** ம் தேதி மாரிமுத்து என்பவரின் சாட்சியாகிய மசா 1 ன் வாக்குமூலம்

(1969 ம் ஆண்டில் 44–வது பிரிவின்படி) திருமதி.பி.மோகனவள்ளி, பி.ஏ., எம்.எல்., சார்பு நீதிபதி, பொள்ளாச்சி அவர்கள் முன்னிலையில், சார்பு நீதிமன்ற இளநிலை உதவியாளர் திரு.எம்.குமரலிங்கம் என்பவர் சாட்சியிடம் சத்தியபிரமாணம் கோரி அதனடிப்படையில் பதிவு செய்த வாக்குமூலம்.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மாரிமுத்து | தாலூக்கா | திருப்பூர் |
| க.பெ. (அ) த.பெ. | வெள்ளைசாமி | சமயம் | இந்து |
| கிராமம் | கடத்தூர்புதூர் | வயது | 55 |

முதல் விசாரணை

நான் இவ்வழக்கின் மனுதாரர். என் தரப்பில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள விவரங்கள் எனக்கு தெரியும். என் தரப்பு ஆவணங்களாக

1.மசாஆ 1 – 13.02.2017 தேதியிட்ட முதல் தகவல் அறிக்கை உண்மை நகல்

2.மசாஆ 2 – 14.04.2017 தேதியிட்ட குற்ற அறிக்கையின் உண்மை நகல்

3.மசாஆ 3 – 06.03.2017 தேதியிட்ட TN 41 AQ 0059 என்ற பதிவெண் கொண்ட TVS விக்டர் மோட்டார்சைக்கிளின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை உண்மை நகல்

4 மசாஆ 4 – 13.02.2017 தேதியிட்ட மாதிரி வரைபடத்தின் உண்மை நகல்

5.மசாஆ 5 – 12.02.2017 தேதியிட்ட காயச் சான்று உண்மை நகல்

6.மசாஆ 6 – எனது மருத்துவச் சான்றிதழ் அசல்

7.மசாஆ 7 – 12.02.2017 தேதியிட்ட மருத்துவ செலவுக்கான மருத்துவ பில்கள் (ரூ.30,785/–), (எண்ணிக்கைகள் –45) அசல்

8.மசாஆ 8 – எனது சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு சென்று வந்ததற்கான போக்குவரத்து செலவுக்கான பில் (எண்ணிக்கை – 1), (ரூ.1,400/–) அசல்

9.மசாஆ 9 – 11.03.2017 தேதியிட்ட எனது ஸ்கேன் (எண்ணிக்கை – 4) அசல்

10.மசாஆ 10– 14.02.2017 தேதியிட்ட எனது ஸ்கேன் ரிப்போட் அசல்

11.மசாஆ 11 – TN 41 AQ 0059 என்ற பதிவு எண் கொண்ட TVS விக்டர் மோட்டார் சைக்கிளின் பதிவுச் சான்றிதழின் உண்மை நகல்

12.மசாஆ 12– TN 41 AQ 0059 என்ற பதிவு எண் கொண்ட TVS விக்டர் மோட்டார் சைக்கிளின் இன்சூரன்ஸ் பாலிசியின் உண்மை நகல்

13.மசாஆ 13– எனது ஆதார் அட்டை நகல் (அசலுடன் ஒப்பிட்டுப்பார்க்கப்பட்டது)

14.மசாஆ 14– எனது வங்கி சேமிப்பு கணக்குப் புத்தகம் நகல் (அசலுடன் ஒப்பிட்டுப்பார்க்கப்பட்டது)

எனவே எனது தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்களை ஏற்று மனுப்படி உத்தரவாக வேண்டுகிறேன்.

**1, 3 எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை**

வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

இச்சாட்சியம் என் முன்பு நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அது சரி என்று அவரால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி
பொள்ளாச்சி